FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## $6^{th}$ Term Examination - 2021

**வணிகக்கல்வி - I**
**Business Studies - I**

**Two Hours**
**Gr. 13 (2021)**

**32 T I**

**அறிவுறுத்தல்கள்**
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :……………………

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினா இல. | புள்ளிகள் |
|---|---|
| 01 – 30 | |
| 31 – 50 | |
| **மொத்தம்** | |

01. “தெற்காசியாவிற்கான நுழைவாயில்” என வர்ணிக்கப்படும் கொழும்பு சர்வதேச பன்னாட்டு நிதி நகரம் (Colombo International Financial City) நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் ஊடாக தற்போது காலிமுகத்திடலில் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றது. இதன் நிர்மாணத்துடன் சார்ந்த உற்பத்திகளை உள்ளடக்கும் தொகுதியாக அமைவது.
   (1) முதன்நிலை மற்றும் விவசாயத்துறை ஆகும்.
   (2) இரண்டாம்நிலை மற்றும் சேவைத்துறை ஆகும்.
   (3) இரண்டாம்நிலை மற்றும் கைத்தொழில்துறை ஆகும்.
   (4) மூன்றாம் நிலை மற்றும் சேவைத்துறை ஆகும்.
   (5) முதன்நிலை மற்றும் கைத்தொழில் துறை ஆகும் (………)

02. கீழே சில நிகழ்வுகள் தரப்படுகின்றன
   A: அரச ஊழியரான மார்க்அன்ரனி வீட்டில் இருந்து பணியாற்றிய கோவிட் தொற்றுக்காலங்களில் ஓய்வுநேரங்களில் உற்பத்தி செய்த காய்கறிகளை தமது நாளாந்தப் பாவனைக்கு பயன்படுத்துகின்றார்.
   B: ஜோன் அட்றியன் தற்போதைய வருமானமில்லாத சூழ்நிலையில் தனது பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட மோட்டார் வாகனத்தை நண்பனான மதுசனுக்கு விற்பனை செய்கின்றார்.
   C: சர்மினி சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய மிகத்தரமான முகக்கவசங்களை உற்பத்தி செய்து தரச்சான்றுடன் சந்தைப்படுத்துகின்றார்.
   D: அபினாஸ் இறக்குமதி செய்யப்பட்ட கைகழுவும் தொற்றுநீக்கி திரவத்தினை (Hand Sanitizer Liquid) கையடக்கமாக சிறிய கொள்கலன்களில் பொதியாக்கி சுட்டுத்துண்டிட்டு நியாய விலையில் விற்பனை செய்கின்றார்.

   மேலேயுள்ள நிகழ்வுகளில் வணிகத்தின் குணாதிசயங்களை வெளிக்காட்டும் நிகழ்வுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவு செய்க.

   1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும்
   (4) B யும் D யும் (5) C யும் D யும் (………)

03. மாற்றமுறும் தற்போதைய வணிகச்சூழல் நிலைமைகள் தொடர்பில் ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு

A. யதுசன் : பொதுவாக சனத்தொகையில் 60 வயதிற்கு மேற்பட்டோர் யாவருமே Covid தடுப்பூசியினை பெறுதல் கட்டாயமானதாகும்.

B. கோகுல் : தற்போதைய Covid தொற்றுக்காலங்களில் இணைய வலையமைப்பு சேவைகள் பாரியளவில் விருத்தியடைந்து செல்கின்றன.

C. கிஷாளன் : தற்போதைய Covid தொற்று நிலைமை காரணமாக ஆலயத்திருவிழாக்கள் மற்றும் சமூகமட்ட நிகழ்வுகள் யாவற்றுக்கும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

D. ஜெரி : தற்போதைய Covid தொற்று நிலைமை காரணமாக வழங்குனர்கள் மூலப்பொருட்களை வழங்காதுவிடுவதனால் உற்பத்திகள் பல தடைப்பட்டுள்ளன.

E. றெசாரியன் : கடந்த சில மாதங்களாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளன.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் பேரண்டச் சூழலுடன் தொடர்புடைய கூற்றாக கருதப்பட முடியாத கூற்று எது?

(1) A (2) B (3) C (4) D (5) E (………)

04. வணிகங்களின் சமூகப்பொறுப்புக்கள் மற்றும் ஒழுக்கங்களுக்கான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – உடமையாளர்களுக்கு நியாயமான உழைப்பினை பெற்றுக்கொடுத்தல்

B – நுகர்வோருக்கு உண்மையான விடயங்களை மாத்திரம் தொடர்பாடல் செய்தல்

C – ஏனைய வணிகங்களுடன் நியாயமாகவும், நேர்மையாகவும் போட்டியிடுதல்.

D – ஊழியர்களுக்கு தொழில்சார்ந்த பாதுகாப்பினை வழங்குதல்

E – ஏனைய தரப்பினருக்குப் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு கருமமாற்றுதல்

மேலேதரப்பட்டவற்றுள் வணிக ஒழுக்கங்களுக்கான உதாரணங்களாக கருதக்கூடியது எது?

(1) A, B, C ஆகியன (2) B, C, E ஆகியன (3) C, D, E ஆகியன

(4) A, D, E ஆகியன (5) B, C, D ஆகியன (………)

05. வணிகங்களை வெற்றிகரமாக கொண்டு நடாத்துவது தொடர்பில் பல்வேறு வழிகளில் அரசு தலையீடுகளை மேற்கொள்வதுடன், அதன் மூலம் அரசு பலவிடயங்களை எதிர்பார்ப்பதும் உண்டு. இதன்படி அட்டவணை x இல் அரச தலையிடும் முறைகளுக்கான உதாரணங்களும், அட்டவணை y இல் அரசு எதிர்பார்க்கும் விடயங்களும் காட்டப்படுகின்றன.

| x | y |
|---|---|
| A – அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது | 1. சிறந்த தரமான சேவையினை வழங்கல் |
| B – பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்தல் | 2. பெருமளவு வணிகங்கள் முதலீடுகளை இடுதல் |
| C – ஒத்த வணிகக்கருமங்களில் ஈடுபடல் | 3. தேவையற்ற வணிகம் உள்நுழைவதனை தடுத்தல் |
| D – உற்பத்தி வரி, கம்பனி வரி போன்றவற்றை அறவிடல் | 4. விற்பனை இலாப அளவுகளை ஊக்குவித்தல் |

x க்கும் y க்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A – 1 B – 4 C – 2 D – 3 (2) A – 2 B – 4 C – 1 D – 3

(3) A – 3 B – 1 C – 4 D – 2 (4) A – 4 B – 3 C – 2 D – 1

(5) A – 1 B – 2 C – 3 D – 4 (………)

06. அரசு தனது பொருளாதார நோக்கங்களை அடைய நிதி மற்றும் இறைக்கொள்கைகளை கடைப்பிடித்துவருவதுண்டு. பின்வருவனவற்றுள்ள நிதிக்கொள்கை கருவியாக கருதப்பட முடியாதது எது?

(1) நியதி ஒதுக்க வீதம் (2) கொள்கை வட்டி வீதம் (3) சுங்க வரி வீதம்

(4) குறிப்பிட்ட வட்டி வீதக் குறைப்புக்கள் (5) திறந்த சந்தை தொழிற்பாடுகள் (………)

07. பின்வருவனவற்றுள் நுகர்வோர் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனமாக கருதப்படக்கூடியது எது?

(1) தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

(2) உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

(3) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

(4) கைத்தொழில் அபிவிருத்திச் சபை

(5) கைத்தொழில் தொழில்நுட்பநிறுவனம் (………)

08. கூற்று A - பொது நோக்கம் ஒன்றினை முன்வைத்து ஆகக்குறைந்தது இருவருடனும் உச்ச எண்ணிக்கை வரையறையற்றும் உருவாக்கும் அமைப்புக்கள் பொதுவாக பங்குகளை வழங்குவதில்லை

கூற்று B - வரையறுத்த பொதுக்கம்பனிகள் பங்குகளை பகிரங்கமாக வழங்குவதுடன், அமைப்பின் பாதுகாப்புக்கென பங்களிப்புச் செய்ய வேண்டிய தொகையினை முற்கூட்டியே பங்குதாரர் குறித்துக் காட்டி இருப்பர்.

மேற்தரப்பட்ட இரண்டு கூற்றுக்களிலும்,

(1) இரண்டு கூற்றுக்களுமே சரியானவை

(2) இரண்டு கூற்றுக்களுமே தவறானவை

(3) கூற்று A சரியானது, கூற்று B தவறானது

(4) கூற்று A தவறானது கூற்று B சரியானது

(5) A யும் Bயும் சரியானது என்பதுடன் B யினூடாக A விபரிக்கப்படுகின்றது. (………)

09. மதுஷன் க.பொ.த உயர்தரத்தில் தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை ஆர்வத்துடன் கற்று தேர்ச்சியடைந்த காரணத்தினால் தற்போதைய Covid 19 தொற்று நிலையில் மாணவர்கள் வீட்டிலிருந்தே பயிற்சிகளினை செய்யவும் சுயமாக கற்கவும் வசதியாக தனது சுயசிந்தனையில் பல்வேறு மென்பொருட்களினை பாடரீதியாக வடிவமைத்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார். அவரது திறனைக் கண்ட கணினி கற்கை நிறுவனமொன்று மென்பொருள் தொடர்பில் கற்கைநெறியொன்றை நிகழ்நிலையூடாக பூர்த்தி செய்ய வசதி செய்து கொடுத்ததுடன், வேறு சில நிறுவனங்களுடன் இணைந்து மென்பொருள் வடிவமைப்பு தொடர்பில் பயிற்சிகளில் ஈடுபடவும் நிகழ்நிலையூடாக வசதி செய்து கொடுத்தது.

மேலே தரப்பட்ட சம்பவத்தில் மதுஷன் எனும் முயற்சியாளர் திறன்களினை விருத்தி செய்து கொண்ட முறைகள் எத்தனை

(1) 1 ஆகும் (2) 2 ஆகும் (3) 3 ஆகும் (4) 4 ஆகும் (5) 5 ஆகும் (………)

10. தற்போது இலங்கை மத்திய வங்கியானது “உரிமம் பெற்ற நுண்கடன் கம்பனி (Micro Credit Company) என்பதனை நிதி நிறுவன வகைப்படுத்தலில் பின்வருவனவற்றுள் எவ்வகையினுள் வகைப்படுத்தியுள்ளது.

(1) வங்கித்துறை

(2) வைப்புக்கைள ஏற்கும் ஏனைய நிதிநிறுவனங்கள்

(3) விசேட நிதி நிறுவனங்கள்

(4) ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்

(5) மேற்குறித்த எவையுமன்று (………)

11. பின்வருவன கடந்த பத்தாண்டுகளில் வணிகம் ஒன்றில் இடம் பெற்ற சில இடர்கள் ஆகும்.

A- வணிக உரிமையாளர் மாரடைப்பால் மரணம் அடைந்திருத்தல்

B- வணிகத்தின் லொறியொன்று விநியோகத்தில் ஈடுபட்டிருக்கையில் விபத்துக்குள்ளாகியிருத்தல்.

C- வணிக களஞ்சியசாலை தீப்பற்றி பொருட்கள் பல அழிவடைந்திருத்தல்

D- வணிக முகாமைத்தீர்மானத்தால் சந்தை நட்டம் ஏற்பட்டிருத்தல்

E- பாரிய தொகைக்கு கடன்பட்ட ஒருவர் தான் முறிவடைந்து விட்டதாக அறிவித்திருத்தல்

F- வங்கியில் வைப்புச் செய்ய எடுத்துச் சென்ற பணத்தொகை கொள்ளையிடப்பட்டிருத்தல்

மேற்படி இடர்களில் காப்புறுதிப் பாதுகாப்பின் ஊடாக பாதுகாப்பினைக் கோரமுடியாத இடராக நீர் எதனைக் கருதுகின்றீர்.

(1) A யும் F யும் (2) B யும் C யும் (3) D யும் E யும்

(4) A மட்டும் (5) D மட்டும் (………)

12. நவீன இலத்திரனியல் தொடர்பாடல் முறைகள் x அச்சிலும் அவற்றுக்கான விளக்கங்கள் y அச்சிலும் தரப்பட்டுள்ளன.

| x | y |
|---|---|
| A. Fax | 1. உலகளாவிய ரீதியில் வலையமைப்பின் ஊடாக செய்திகளை பரிமாற்றுதல் |
| B. Mobile | 2. தொலைபேசி வலையமைப்பின் ஊடாக நிறுவனத்தினுள் தகவல்களைப் பரிமாற்றுதல் |
| C. E-mail | 3. சாதாரண தொலைபேசியூடாக கடிதம், சித்திரம் என்பவற்றை உடனடியாக அனுப்புதல் |
| D. Intercom | 4. இணையத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுனங்களினுள் காணப்படும் வலையமைப்பு |
| E. Intranet | 5. செய்மதி தொழிநுட்பத்தின் உதவியுடன் தகவல்களை பரிமாற்றுதல் |

x, y என்பவற்றை இணைக்கும் போது சரியான இணைப்பாக அமைவது

(1) A – 3 B – 5 C – 1 D – 2 E – 4
(2) A – 4 B – 1 C – 5 D – 3 E – 2
(3) A – 1 B – 3 C – 4 D – 5 E – 2
(4) A – 5 B – 2 C – 3 D – 4 E – 1
(5) A – 2 B – 4 C – 5 D – 1 E – 3 (………)

13. போக்குவரத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் x அச்சிலும் அவற்றை வழங்கும் நிறுவனங்கள் y அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

| x | y |
|---|---|
| A – வாகனத்தகுதிச் சான்றிதழ் | 1. பிரதேச செயலாளர் காரியாலயம் |
| B – வாகன வரி அனுமதிப்பத்திரம் | 2. மோட்டார் போக்குவரத்து திணைக்களம் |
| C – சாரதி அனுமதிப்பத்திரம் | 3. அரச அங்கீகாரமளிக்கப்பட்ட வேலைத்தளம் |
| D – வீசா அனுமதிப்பத்திரம் | 4. தூதுவராலயம் |
| E – சுமைச்சீட்டு | 5. கப்பல் கம்பனி |

x, y என்பவற்றை இணைக்கும் போது சரியான இணைப்பாக அமைவது

(1) A – 1 B – 4 C – 5 D – 2 E – 3
(2) A – 4 B – 2 C – 1 D – 3 E – 5
(3) A – 2 B – 1 C – 3 D – 5 E – 4
(4) A – 3 B – 1 C – 2 D – 4 E – 5
(5) A – 5 B – 3 C – 4 D – 2 E – 1 (………)

14. கூற்று A: ஏற்றுமதி வியாபாரத்தில் ஏற்றப்படும்பொருட்களுக்கான காப்புறுதி ஒப்பந்தத்தினை ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் ஆகிய எவரேனும் ஒருவரால் பெறப்பட முடிவதுண்டு.

கூற்று B: ஏற்றுமதி வியாபாரத்தில் பொதுவாக பொருட்கள் உரிமை மாறும் இடங்களினைப் பொறுத்து எவர் காப்புறுதி செய்ய வேண்டும் என்பது தீர்மானிக்கப்படுவதுண்டு.

மேலே தரப்பட்ட இரண்டு கூற்றுக்களிலும்

*(1)* A சரியானது B தவறானது
*(2)* A தவறானது B சரியானது
*(3)* A மற்றும் B ஆகிய இரண்டுமே தவறானது
*(4)* A யும் B யும் சரியானது என்பதுடன் B யினுடாக A விபரிக்கப்படுகின்றது.
*(5)* A யும் B யும் சரியானது என்பதுடன் B யினுடாக A விபரிக்கப்படவில்லை (………)

15. உற்பத்தி நிறுவனமொன்றின் முகாமையாளர். தனது நடுத்தர மற்றும் கீழ்மட்ட முகாமையாளர்களுடனான கூட்டத்தில் பின்வரும் கருத்தினை முன்வைத்தார்.
"நீங்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கருமங்களை சரியாக செய்வீர்களேயானால் இழிவளவான கிரயத்துடன் நாம் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்" மேற்படி கருத்தின் ஊடாக முகாமையாளர் எடுத்துக்கூற முற்பட்ட முகாமைத்துவ எண்ணக்கரு பின்வருவனவற்றுள் எதுவாக இருக்குமென நீர் கருதுகின்றீர்.

(1) செயற்திறன் (2) வினைத்திறன் (3) உற்பத்தித்திறன்
(4) பயனுறுதி (5) கட்டுப்பாடு (………)

16. றொபர்ட். எல். கேட்ஸ் என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முகாமையாளர்களிடம் மேம்படுத்த வேண்டிய திறன்கள் x அச்சிலும் அத்திறன்களினுள் உள்ளடங்கியுள்ள ஆற்றல்கள் y அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

| x | y |
|---|---|
| A – எண்ணக்கருத்திறன் | 1. மற்றையோர் கருத்துக்களை நன்கு செவிமடுத்தல்<br>2. தந்திரோபாயமாக சிந்தித்தல் |
| B – மானிடத்திறன் | 3. உடனடியாகவே செயற்படும் திறன்<br>4. உள்ளக, வெளியக சூழல்களை இனம்காணுதல் |
| C – தொழில்நுட்பத்திறன் | 5. உரிய கருமம் தொடர்பில் சிறப்பறிவு<br>6. ஊழியரின் பலம், பலவீனங்களை அறிந்து வைத்திருத்தல் |

x, y என்பனவற்றினை இணைக்கும் போது சரியான இணைப்பாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) A – 1, 5 B – 2, 6 C – 3, 4
(2) A – 3, 6 B – 1, 4 C – 2, 5
(3) A – 4, 6 B – 1, 5 C – 2, 3
(4) A – 2, 3 B – 1, 5 C – 4, 6
(5) A – 2, 4 B – 1, 6 C – 3, 5 (………)

17. பின்வருவன முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சில விடயப்பரப்புக்கள் ஆகும்.
A – ஊழியர் உற்பத்தித்திறனை அதிகரிக்கத்தூண்டுதல்
B – முறையான வளப்பகிர்வினை மேற்கொள்ளுதல்
C – தனிநபர் மற்றும் குழுக்களின் நடத்தையில் மாற்றங்களினை ஏற்படுத்துதல்
D – வெளியீடுகள் குறைவடையும் போது நியமங்களில் மாற்றங்களை ஏற்படுத்துதல்
E – ஊழியர் ஒத்துழைப்பினைப் பெற மேல்நோக்கிய தொடர்பாடலை ஊக்குவித்தல்

மேற்கூறப்பட்டவற்றுள் நெறிப்படுத்தலுடன் தொடர்புடைய விடயங்களாக நீர் எவற்றைக் கருதுகின்றீர்.

(1) A, B, C (2) B, C, D (3) A, C, E (4) C, D, E (5) A, D, E (………)

18. உற்பத்திச் செயற்திறனை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான அளவீடே உற்பத்தித்திறன் என்பதாகும். பின்வருவனவற்றுள் மொத்த உற்பத்தித்திறன் விருத்தியில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய முறையொன்றாக எதனைக்கருதுகின்றீர்?

(1) உள்ளீடுகளை நிலையாக வைத்து வெளியீடுகளை அதிகரித்தல்
(2) வெளியீட்டினை நிலையாக வைத்து உள்ளீடுகளை குறைத்தல்.
(3) உள்ளீடுகளை குறைத்தலும் வெளியீட்டினை அதிகரித்தலும்
(4) உள்ளீட்டைக் குறைப்பதைவிட கூடிய வேகத்தில் வெளியீட்டினைக் குறைத்தல்
(5) உள்ளீடுகளை அதிகரிப்பதைவிட கூடியவேகத்தில் வெளியீட்டினை அதிகரித்தல் (………)

19. உற்பத்தி நிறுவனமொன்றில் இருப்புக்கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பிலான கலந்துரையாடலின் போது செயற்பாட்டு முகாமையாளரினால் கூறப்பட்டகருத்தொன்று வருமாறு "நாங்கள் இம்முறையினை பின்பற்றுவோமாயின் கட்டளைகள் இல்லாதபோது நிலையான கிரயங்கள் ஏற்படுவதனை எவராலும் தடுக்க முடியாது போய்விடும்"
மேற்படி கூற்றின் ஊடாக செயற்பாட்டு முகாமையாளர் வலியுறுத்திக்கூறும் இருப்புக்கட்டுப்பாட்டு முறையாக நீர் எதனைக் கருதுகின்றீர்.

(1) உரிய நேரத்தந்திரோபாயம் (2) ABC பகுப்பாய்வு (3) இரு கொள்கலன் முறை
(4) இருப்பு மட்ட முறை (5) தொடர் இருப்பு அறிக்கைப்படுத்தும் முறை (………)

20. • ஒரு உற்பத்தியில் ஏற்படும் நட்டத்தினை பிறிதொரு உற்பத்தியினூடாக ஈடுசெய்தல்
- சந்தைகள் விரிவுபடுத்தப்படல்
- விற்பனை, இலாபஅளவுகள் உயர்வடைந்து செல்லுதல்
- பல்வேறுபட்ட வாடிக்கையாளரை கவரமுடிதல்

மேற்படி நன்மைகள் யாவற்றினையும் பெறுவதற்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஒருவர் கவனம் செலுத்த வேண்டியது பின்வருவனவற்றுள் எது என கருதுகின்றீர்?

*(1)* உற்பத்தி மட்டங்களில்
*(2)* உற்பத்தி பொருட் கலவையில்
*(3)* உற்பத்திப் பொருள் வாழ்க்கை சுற்றோட்டத்தில்
*(4)* சேவைச்சந்தைப்படுத்தல் கலவையில்
*(5)* முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் (………)

21. உற்பத்திப் பொருட்களினை விரைவாக கொள்வனவு செய்ய நுகர்வாளரை தூண்டுவதான ஒரு குறுங்கால ஊக்குவிப்பு முறை விற்பனை மேம்படுத்தல் ஆகும். பின்வருவனவற்றுள் விற்பனை மேம்படுத்தல் கலவை மாறிகளை சரியாக கொண்ட தொகுதியாக இருப்பது.

*(1)* தொலைக்காட்சி / தொலைபேசி / வீதி நாடகங்கள்
*(2)* பரிசளிப்பு / ஏலவிற்பனை / அனுசரணைகள்
*(3)* விலைக்குறைப்பு / லொத்தர் சீட்டிழுப்பு / மாதிரி வழங்கல்
*(4)* விரிவுரைகள் / நேரடித்தபால் / விளையாட்டு விழாக்கள்
*(5)* பதாகை / கண்காட்சி / இணையவலைப்பின்னல் (………)

22. பின்வரும் அட்டவனையில் x நிரலானது கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் விற்பனை செய்யப்படும் பிணைகளின் சில வகைகளினையும், y நிரலானது அவற்றுக்கு கிடைக்கக்கூடிய அனு கூலங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| x | y |
|---|---|
| A- முன்னுரிமைப் பங்குகள் | 1. மூலதன ஆதாயத்தை உழைக்க முடிதல் |
| B- பங்காணைப்பத்திரங்கள் | 2. நிலையான வட்டி வீதத்தை பெற முடிதல் |
| C- அரச கடன்பிணை | 3. கம்பனியில் உரிமையாளராவதற்கு உரித்து |
| D- சாதாரணபங்குகள் | 4. முதலீட்டுக்கு கூடிய பாதுகாப்பு கிடைத்தல் |
| E- கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக்கடன் | 5. நிலையான இலாப விகிதசாரத்தை பெற முடிதல் |

x,y என்பனவற்றினை இணைக்கும் போது சரியான இணைப்பாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

*(1)* A – 1 B – 5 C – 3 D – 2 E – 4
*(2)* A – 2 B – 4 C - 1 D – 5 E – 3
*(3)* A – 3 B – 2 C – 4 D – 1 E – 5
*(4)* A – 4 B – 3 C – 2 D – 5 E – 1
*(5)* A – 5 B – 1 C – 4 D – 3 E – 2 (………)

23. கூற்று A : முதலாம்தர பங்குச்சந்தை, வணிகநிறுவனங்களுக்கு புதிய மூலதனத்தை பெற்றுக் கொடுப்பதில்லை.

கூற்று B : முதலாம்தர பங்குச்சந்தையில் ஆரம்ப பொதுவழங்கல், பருவமுதிர்வு பொதுவழங்கல் ஆகிய இரு வழங்கல்கள் இடம்பெறுவதுண்டு.

மேலேதரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களிலும்

*(1)* இரண்டு கூற்றுக்களுமே சரியானவை
*(2)* இரண்டு கூற்றுக்களுமே தவறானவை
*(3)* கூற்று A சரியானது, ஆனால் கூற்று B தவறானது
*(4)* கூற்று A தவறானது, ஆனால் கூற்று B சரியானது
*(5)* கூற்று Aயும், Bயும் சரியானது என்பதுடன் கூற்று B யினூடாக A விபரிக்கப்படவில்லை.

(………)

24. பின்வருவனவற்றுள் நிதிச்சந்தை தொடர்பில் மிகவும் சரியான கூற்று எது?
(1) பணச்சந்தைக் கருவிகளுக்கான உதாரணங்கள் திறைசேரி உண்டியல்கள், வணிகத்தாள், மற்றும் தாபன முறிகள் ஆகும்.
(2) மூலதனச்சந்தைக் கருவிகளுக்கான உதாரணங்கள் சாதாரண பங்குகள், கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக்கடன்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஆகும்.
(3) நீண்டகாலக்கடன்கள் மற்றும் தாபன முறிகளுக்கான சந்தை பணச்சந்தை ஆகும்.
(4) குறுங்காலக்கடன் பிணைகளுக்கான சந்தை மூலதனச்சந்தை ஆகும்.
(5) மூலதனச்சந்தையானது நிதிச்சந்தை மற்றும் பணச்சந்தை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
(………)

25. நிறுவனமொன்றில் எதிர்வரும் ஆண்டுக்கான மனிதவள தேவையினை எதிர்வுகூறும் போது கருத்தில் கொள்ளப்பட தேவையில்லாத காரணியாக பின்வருவனவற்றுள் எதனைக் கருதுகின்றீர்.
(1) நிறுவனத்தின் நோக்கங்கள்
(2) உற்பத்தி முறை
(3) தொழில்நுட்ப மாற்றங்கள்
(4) ஊழியர் செயலூக்கமளித்தல்
(5) குறித்த பொருள் அல்லது சேவைக்கான கேள்வி (………)

26. செல்வம், காதர், வில்லியம் ஆகியோர் அரச நிர்வாக சேவையில் ஈடுபடும் அதிகாரிகள் மூவராவர்.

| பெயர் | சேவைக்காலம் தரம் II இல் (வருடம்) | மொத்த சேவைக்காலம் (வருடம்) |
|---|---|---|
| செல்வம் | 05 | 20 |
| காதர் | 07 | 10 |
| வில்லியம் | 06 | 25 |

இம் மூவரில் ஒருவரை தரம் 1 இற்குப் பதவி உயர்த்தப்பட வேண்டி உள்ளது. மிகவும் பொருத்தமான நபருக்குரிய கூற்றாக இருப்பது
(1) தரம் 11 இன் சேவைக்காலம் அதிகமாக இருப்பதால் காதர் தகமை கொண்டவர்.
(2) மொத்த சேவைக்காலம் செல்வத்தை விட வில்லியம் கூடுதலாக இருப்பதால் வில்லியம் பொருத்தமானவர்
(3) மொத்த சேவைக்காலம் 25 வருடங்களைப் பூர்த்திசெய்து இளைப்பாறுவதற்கு அண்மித்திருப்பதனால் வில்லியம் தகமை பெற்றவர்.
(4) வில்லியம் இளைப்பாறுவதற்கான காலத்தினை அண்மித்திருப்பதனால் அதற்கடுத்த மொத்த சேவைக்காலத்தினை உடைய செல்வம் பொருத்தமானவர்
(5) தரம் 11 இல் குறைவான சேவைக்காலமாக இருப்பதனால் செல்வம் தகமை கொண்டவர்.
(………)

27. மனிதவள முகாமைத்துவம் தொடர்பிலான இரு கூற்றுக்கள் வருமாறு
கூற்று A : வேலை குறித்துரைத்தலின் ஒரு பகுதியாக வேலை விபரணம் அமையமாட்டாது.
கூற்று B : வேலை விபரணத்தில் முன்வைக்கப்படும் இருவடிவங்களே வேலை வடிவமைப்பும், வேலை குறித்துரைத்தலும் ஆகும்.

மேலே தரப்பட்ட இரண்டு கூற்றுக்களிலும்
(1) கூற்று Aயும், கூற்று Bயும் சரியானது என்பதுடன், கூற்று B யினூடாக கூற்று A விபரிக்கப்படுகின்றது.
(2) கூற்று Aயும், கூற்று Bயும் தவறானது என்பதுடன், கூற்று A யினூடாக கூற்று B விபரிக்கப்படவில்லை.
(3) இரண்டு கூற்றுக்களுமே சரியானவை.
(4) இரண்டு கூற்றுக்களுமே தவறானவை.
(5) கூற்று A சரியானது என்பதுடன் கூற்று B தவறானதாகும். (………)

28. கல்லூரியொன்றின் வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர்களினால் தற்போதைய இடர்கால சூழ்நிலையில் நிகழ்நிலைவகுப்புக்களினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கும், மேலும் தேவைப்படும் வசதிகளை மேற்கொள்ளவும் என கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற நிகழ்நிலை வகுப்புக்கள் பற்றிய விபரங்களை அதிபரிடம் கோருகின்றனர். அதிபர் இத்தகவல்களினை அவர்களுக்கு வழங்குவதற்கு உதவுவதான தகவல் முறைமை பின்வருவனவற்றின் எது எனக்கருதுகிறீர்.

(1) நிறைவேற்று ஆதாரமுறைமை (ESS)
(2) கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை. (TPS)
(3) அலுவலக தன்னியக்க முறைமை (OAS)
(4) முகாமைத்துவத் தகவல் முறைமை (MIS)
(5) தீர்மான உதவி முறைமை (DSS) (………)

29. தற்போதைய Covid 19 சூழ்நிலைகளில் நிறுவன கூட்டங்களினையும், பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகளினையும் முன்னெடுப்பதற்காக பெருமளவு பயன்படுத்தப்படும் Zoom செயலி பின்வருவனவற்றுள் எதுவாகக் கருதப்படும்.

(1) முறைமை மென்பொருள் (System software) (2) பிரயோக மென்பொருள் (Application software)
(3) உயிர்ப்பொருள் (Live ware) (4) நிலை மென்பொருள் (Firm ware)
(5) வன்பொருள் (Hard ware) (………)

30. வணிகமொன்றின் வணிகத்திட்டத்தில் காணப்படும் செயற்பாட்டுத் திட்டமொன்றின் உள்ளடக்கமாகக் கருதப்பட முடியாத காரணி பின்வருவனவற்றுள் எதுவெனக் கருதுகின்றீர்

(1) மொத்த உற்பத்திக்கிரயமும் அலகுக்கிரயமும் (2) கழிவுப்பொருள் அகற்றல்
(3) மூலப்பொருள் தேவைப்பாடு. (4) ஊழியர் தேவைப்பாடு
(5) போட்டித்தன்மை பகுப்பாய்வு (………)

- ***31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொற்களை இட்டு பூரணப்படுத்துக.***

31. (அ) இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் வருமானங்கள் இழந்து தவிக்கும் மக்கள் மத்தியில் வணிகங்கள் ………………………………………. நிறைவேற்றுதல் முக்கிய தேவைப்பாடாக எதிர்பார்க்கும் அதேவேளை, அவை வணிக, ……………………………………. பின்பற்றுதலும் முக்கியமான, ஒன்றாக எதிர்பார்க்கப்படுவதுண்டு.

(ஆ) ………………………………………………………. தன்மையினூடாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், விலை மட்டத்தைப் பேணல் என்பன இடம் பெறுவதுடன், …………………………………………………. தன்மையினூடாக வெளிநாட்டுச் செலவாணி வீதத்தை நிலையான மட்டத்தில் பேணல் இடம் பெறுவதுண்டு.

32. (அ) நிதிக்கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கை வட்டி விகிதங்கள் தொடர்பான, பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் மூலம் வெளிக்காட்டப்படும் முழுப்பெயரை எழுதுக?

- SDFR ……………………………………………………………………………………
- SLFR ……………………………………………………………………………………

(ஆ) சந்தையொன்றில் நடைமுறையில் காணப்படும் கருத்துக்கு அமைய வணிகமொன்றை ஆரம்பிப்பவர் ……………………………………………….. என கருதப்படுவதுடன், தனது கருத்துக்கமைய வணிகமொன்றை ஆரம்பிப்பவர் ……………………………………………. எனக் கருதப்படுவதுண்டு.

33. (அ) பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகள் எல்லாமே, பொதுவாக ……………………………… கம்பனிகளாக இருக்கும் அதேவேளை, இப்பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளில் பங்கு முதலீட்டவர்களின் பெயர்ப்பட்டியல் ………………………………. இல் காணப்படுவதுண்டு.

(ஆ) ஏதாவது பொருளொன்றை அல்லது சேவையொன்றை வழங்கும் வணிகம் அவற்றைக் குறித்த சந்தைப்பிரதேசமொன்றில் விற்பனை செய்வதற்கு மற்றொரு வணிகத்திற்கு சந்தர்ப்பம் வழங்குவதான முறைமையானது ……………………..……………………………………, ………………………………………….…….. என வகைப்படுத்தப்படுவதுண்டு.

34. (அ) உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய போக்குவரத்து வழங்கல் சேவை, ஆகிய இரண்டிற்குமான மையத்தரப்பினராக …………………………………….. காணப்படுவதுடன், …………………………………….. பொருட்களின் உற்பத்தியாளர் இவ்விரு வழங்கல் சேவைகளிலும் சமநிறை கொண்டதாக கரிசனை செலுத்துவதுண்டு.

(ஆ) ஒவ்வொரு நாடும் பொருட்களை ………………………………….. செய்வதனையும் மற்றும் ……………………………… செய்வதனையும் ஒப்பிட்டு குறைந்த கிரயமுடைய ஒன்றைத் தெரிவு செய்தல் ஒப்பீட்டுக்கிரய நன்மை என கருதப்படுவதுண்டு.

35. (அ) நிறுவன இலக்குகளையும் நோக்கங்களையும் திட்டமிடப்பட்டவாறு ………………………….. ……………….... உச்சதரத்துடன் அடைந்து கொள்ளும் செயற்பாடு ………………………… என கருதப்படுவதுண்டு.

(ஆ) நிறுவனமொன்றின் பொது முகாமையாளர் ஒருவரின் தோற்றமும், அவரது பதவியும் பொருத்தமுறுவதான வலு ……………………………… எனப்படுவதுடன் வைத்தியர் ஒருவர் விஷேடமான துறையொன்று தொடர்பில் கொண்டுள்ள அறிவு, திறன், ஆற்றல் என்பன ……………………… வலுவாகக் கருதப்படுவதுண்டு.

36. (அ) பொதுவாக களஞ்சியங்களில் இருப்பு தொடர்பில் கட்டளையிடும் அளவுகள் அதிகரிக்க அதிகரிக்க ……………………..……………….. கிரயம் அதிகரித்துச் செல்லும் அதேவேளை ……………………………………… கிரயங்கள் குறைவடைந்து செல்லுவதுண்டு.

(ஆ) உற்பத்தி வரிசை (Product range) வேலை உற்பத்தியில் ………………………………… ஆக காணப்படுவதுடன், பாய்ச்சல் உற்பத்தியில் …………….....………….. ஆக காணப்படுவதுண்டு.

37. (அ) சந்தைப்படுத்தலில் அகலம், நீளம் என்பவை ……………………………. கலவை மாறிகளாக இனங்காணப்படுகையில் விலை, இடம் என்பவை …………………………………. கலவை மாறிகளாக இனங்காணப்படுவதுண்டு.

(ஆ) இலக்கு சந்தையினை அடைய சந்தையினுள் உட்பிரவேசிக்கும் சந்தைப்படுத்தல் வழிமுறைகள் ……………………………………, …………………………………………… என்பன பயன்படுத்தப்படுவதுண்டு.

38\. (அ) கொழும்பு பங்குபரிமாற்றத்தில் பாரியளவு கூறப்பட்ட மூலதனத்துடன் ஆரம்பிக்கப்படும் கம்பனிகளுக்காக ஒதுக்கப்பட்ட பட்டியற்திரையாக ……………………………………………………….. காணப்படுகையில், வரையறுக்கப்பட்ட கூறப்பட்ட மூலதனத்துடன் ஆரம்பிக்கப்படும் கம்பனிகளுக்காக ஒதுக்கப்பட்ட பட்டியற்திரையாக ……………………………………………………… காணப்படுகின்றது.

(ஆ) வணிகங்களுக்கு தேவைப்படும் நிலையான மூலதனமானது, ………………………………………., ……………………………………… ஆகிய இரு மூலகங்களில் திரட்டப்படுவதுண்டு.

39\. (அ) மனிதவள முகாமைத்துவத்தில் பயிற்சியளித்தல் முறைகளில் ஒன்றாகிய "கட்டுறுப்பயில்வு" (Internship) ஒரு ………………………………………….. பயிற்சியாகக் கருதப்படுகையில், விமான ஓட்டியாக பயிற்சி பெறும் ஒருவருக்கு போலியான மாதிரி விமானம் ஒன்றில் பயிற்சியளித்தல் ………………………………… பயிற்சியொன்றாக கருதப்படுவதுண்டு.

(ஆ) குறித்த ஒரு கோரிக்கை தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும், தொழில்தருநருக்கு மிடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தை ……………………………………………………. என அழைப்பதுடன், இதன் பெறுபேறாக இரு தரப்பினரிடையே உருவாக்கப்படுவது ………………………………. என்பதாகும்.

40\. (அ) பயன்பாட்டிற்கமைய தகவல் முறைமையினை வகைப்படுத்தும் போது, முகாமைத்துவ மட்டம் என்பதனுள் இடம்பெறும் தகவல்முறைகளாக, …………………………………………………, ……………………………………… என்பன அடக்கப்படுவதுண்டு.

(ஆ) வணிக எண்ணங்கள் அனைத்திலுமிருந்து பொருத்தமான வணிக எண்ணங்களை இனங்காண்பதற்காக ……………………………………. பகுப்பாய்வும், முயற்சியாளருக்குக் கூடுதலான அனுகூலங்களை வழங்கும் வணிக எண்ணத்தைத் தெரிவு செய்வதற்காக ………………………………………….. பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படுவதுண்டு.

- **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை எழுதுக.**

41\. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியிலும், கூட்டுறவுச் சங்கம் ஒன்றிலும் நீர் காணும் எவையேனும் ஒற்றுமையான பண்புகள் நான்கினைத் தருக.

1) ………………………………………………………………………………………………
2) ………………………………………………………………………………………………
3) ………………………………………………………………………………………………
4) ………………………………………………………………………………………………

42\. தொடர்பாடல் செயன்முறையில் அனுப்புபவர் (Sender) , பெறுபவர் (Respond) ஆகிய இரு மனிதவளம் தவிர்ந்த வேறு அடிப்படைச் செயன்முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) ………………………………………………………………………………………………
2) ………………………………………………………………………………………………
3) ………………………………………………………………………………………………
4) ………………………………………………………………………………………………

43. வெளிநாட்டு வியாபாரத்தில் செலவாணிக்கட்டுப்பாட்டுச் சட்டதிட்டங்கள், சுங்க சட்டதிட்டங்கள் போன்ற தடைகளைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் சர்வதேச அமைப்புக்கள் நான்கினைத் தருக.

1) ..............................................................................................................................
2) ..............................................................................................................................
3) ..............................................................................................................................
4) ..............................................................................................................................

44. முகாமைத்துவத்தில் ஆலோசனை அல்லது வேண்டுகோள் வடிவில் இடம்பெறும் கீழிருந்து மேலான தொடர்பாடலுக்கு எவையேனும் நான்கு உதாரண வடிவங்களைக் குறிப்பிடுக.

1) ..............................................................................................................................
2) ..............................................................................................................................
3) ..............................................................................................................................
4) ..............................................................................................................................

45. உத்தம இருப்பு மட்டங்களில் ஒன்றாகிய இழிவு இருப்பு மட்டத்தினைக் கணிப்பிடும் போது கருத்தில்கொள்ள வேண்டிய காரணிகளில் மறுகட்டளை மட்டம் தவிர்ந்த வேறு நான்கு காரணிகளினைக் குறிப்பிடுக.

1) ..............................................................................................................................
2) ..............................................................................................................................
3) ..............................................................................................................................
4) ..............................................................................................................................

46. வணிக நிறுவனங்கள் சிறந்த உயர்பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தைப்படுத்தலில் சகல கூறுகளும் ஒரே நோக்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதுண்டு, அத்தகைய ஒன்றிணைக்கப்பட்ட நான்கு கூறுகளினையும் குறிப்பிடுக.

1) ..............................................................................................................................
2) ..............................................................................................................................
3) ..............................................................................................................................
4) ..............................................................................................................................

47. நிதி விகிதப்பகுப்பாய்வு தொடர்பிலான இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று A : குறுங்கால நிதிக்கடப்பாடுகளுக்கு முகம்கொடுப்பதான இயலுமையைச்சுட்டிக்காட்டும்.

கூற்று B : நிறுவனச் சொத்துக்களின் முதலீட்டிற்கும் அவற்றினால் உழைக்கப்பட்ட விளைவுக்கு மிடையே காணப்படும் தொடர்பினைச் சுட்டிக்காட்டும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களிலிருந்து அவை ஒவ்வொன்றும் எத்தகைய நிதி விகிதங்கள் எனவும், அவற்றுள் அடங்கும் விகிதங்களுக்கு ஒவ்வோர் உதாரணமும் தருக.

| **கூற்று** | **நிதி விகிதம்** | **உதாரணம்** |
|---|---|---|
| A | ...................................... | ...................................... |
| B | ...................................... | ...................................... |

48. வேலை அல்லது வேலைச்சூழல் தொடர்பில் ஊழியர் ஒருவரிடம் ஏற்படக்கூடிய துன்பதுயரங்களைத் தீர்ப்பதன் மூலம் நிறுவனத்திற்குக் கிடைக்கும் எவையேனும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………………

49. பின்வரும் தரவு ஒழுங்கமைத்தலின் போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப வகைகள் ஒவ்வொன்றிலும், தரவு தயாரிப்பதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் எவை என எதிரேயுள்ள இடைவெளியில் எழுதுக.

1) கை இயக்க முறை :- …………………………………………………

2) பகுதிக்கை இயக்க முறை :- …………………………………………………

3) இலத்திரனியல் பொறிமுறை :- …………………………………………………

4) இலத்திரனியல் தரவு தயாரித்தல் முறை :- …………………………………………………

50. தற்போது இணையவழி கற்றல் செயற்பாடுகளுக்கு பெருமளவு பயன்படுத்தப்படும் பின்வரும் செயலிகளின் பெயரினை அருகே குறிப்பிடவும்

1) ……………………………………….

2) ……………………………………….

3) ……………………………………….

4) ……………………………………….

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
Conducted by Field Work Centre, Thondaimanaru
6th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வி - II<br>Business Studies - II | Three Hours and ten minutes<br>Gr. 13 (2021) | 33 | T | II |

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

***அறிவுறுத்தல்கள் :-***

❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01. அபிஷன், ஸ்ரெபின்சன் ஆகிய இரு முயற்சியாளர்கள் தற்போதைய Covid – 19 தொற்று நிலைமைகளில் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நிகழ் நிலையினூடாக தொடர்ச்சியாக இடம்பெறுவதனால், மாணவர்கள் உளநெருக்கீடுகளை உடையவர்களாகவும், ஆர்வம் குறைந்தவர்களாகவும், மற்றும் ஒழுங்கான வரவு இன்றியும் இருப்பதாக ஆசிரியர்கள் முறையிடுவதனை சிந்தித்து "மகிழ்தளம்" (Happy site) என்ற பெயரில் வணிகமொன்றினை ஆரம்பிக்கின்றனர். இதில் மாணவர்களை மகிழ்விக்கக்கூடிய பல்வேறு வகையான மென்பொருட்களை வகுப்பு ரீதியாகவும், பாடரீதியாகவும் தயார் செய்து சந்தைக்கு வழங்குகின்றனர். இதன் பாவனையினைத் தொடர்ந்து மாணவர்களின் கற்றலிலான ஆர்வம் அதிகரித்திருப்பதாக பெற்றோரும், ஆசிரியரும் தமது கருத்துக்களை பதிவிட்டுள்ளனர்.

1) அ) "மகிழ்தளம்" வணிகமானது, மாணவர்களின் தேவையினையா? அல்லது விருப்பத்தினையா பூர்த்தி செய்கின்றது? காரணத்துடன் குறிப்பிடுக.
   ஆ) "மகிழ்தளம்" வணிகம் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பாக இருந்த இரு நிலைமைகளினைக் குறிப்பிடுக.

2) அ) "மகிழ்தளம்" வணிக உற்பத்தியினை நீர் பொருள் உற்பத்திகளாகவா? அல்லது சேவை உற்பத்திக்களாவா கருதுகின்றீர்? காரணம் தருக.
   அ) வணிக வகைப்படுத்தலில் "மகிழ்தளம்" வணிகம் எத்தகைய வணிக வகை எனவும், அது பதிவு செய்யப்பட வேண்டிய சட்டத்தினையும் குறிப்பிடுக.

3) அ) "மகிழ்தளம்" வணிகம் தற்போதைய நிலைமையில் கல்வித்துறை விருத்திக்கு எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது என்பதற்கு, இருவழிகளைக் குறிப்பிடுக.
   அ) "மகிழ்தளம்" வணிகத்தில் நீர் காணும் இரு அனுகூலங்களையும், இரு வரையறைகளையும் தருக.

4) "மகிழ்தளம்" வணிகத்தில் அக்கறை காட்டும் எவையேனும் நான்கு தரப்பினரைப் பெயரிட்டு, அவர்கள் அக்கறைப்படுவதற்கான நான்கு காரணங்களையும் தருக.

5) அ) "மகிழ்தளம்" வணிகத்தினை எவையேனும் நான்கு வணிக வகைப்படுத்தலினுள் வகைப்படுத்திக் காட்டுக.
   அ) "மகிழ்தளம்" வணிகத்தினால் உற்பத்தி செய்து வழங்கப்படும் மாணவர்களை மகிழ்விக்கக்கூடிய மென்பொருட்கள் எவ்வாறு அமைந்திருக்க முடியும் என்பதற்கு உமது அனுபவத்தின் ஊடான நான்கு உதாரணங்களைத் தருக.

(5x4=20 புள்ளிகள்)

02\. 1) அ) "பொதுவாக ஒவ்வொரு பேரினச்சூழல் காரணிகளுக்கிடையிலும் ஏதேனும் ஒரு வகையில் இடைத்தொடர்புகள் காணப்படுவதுண்டு."

பின்வரும் நிலைமைகளில் தொடர்புபட்டுள்ள தலா இரு பேரினச்சூழல் காரணிகளை ஒவ்வொன்றிற்கும் குறிப்பிடுக.

- இன்று ஆலயத் திருவிழாக்கள் நிகழ்நிலையூடாகவே நடாத்தப்படுகின்றன.
- வங்கிகள் தன்னியக்க டெலர் இயந்திரங்களைப் பொருத்தும் போது மத்திய வங்கியின் அனுமதியினைப் பெறுதல் கட்டாயமானதாகும்.

ஆ) "வணிகமானது சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பு செய்தல் என்பதும் நிலைபேறான அபிவிருத்தியில் உறுதி செய்ய வேண்டிய விடயம் ஒன்றாகும்" இதன்படி தற்போதைய சூழ்நிலையில் சமூக பாதுகாப்பினை வணிகமொன்று எவ்வாறு முன்னெடுக்கும் என்பதற்கு நான்கு உதாரணம் தருக.

2) அ) இலங்கையில் கூட்டுறவு வணிகங்களின் தோல்வியில் செல்வாக்குச் செலுத்திய நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) "இலங்கையில் அரச துறைசார்ந்த வணிகங்கள், பல்வேறு வடிவங்களில் செயற்படுகின்றன" அவற்றுள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களின் குனாம்சங்கள் நான்கினை ஒப்பிடுக.

3) நாடொன்றின் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்கள் பல்வேறு முறையில் தமது பங்களிப்பினை வழங்குகின்றன. அத்தகைய எவையேனும் நான்கு பங்களிப்புக்களினைத் தருக.

4) அ) சிறிய மற்றும் நடுத்தரவு அளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான நான்கு காரணங்களைத் தருக.

ஆ) சிறு நடுத்தர வணிகங்களினை ஊக்குவிப்பதற்கு அரசு பின்பற்றும் நிதி சார்ந்த, நிதி சாராத ஊக்குவிப்புக்களுக்கு தலா இரு உதாரணங்களினைத் தருக.

5) ஜெனிபர் என்ற முயற்சியாளர் சிறிய அளவில் ஆரம்பித்த கைவினைப் பொருள் உற்பத்தி வணிகம், இன்று சந்தையில் அதிக விருப்புக்குரிய வணிகமாக மாறியுள்ளது. அதிகரித்த கேள்வியினை ஈடு செய்யவும், பாரிய வணிகம் ஒன்றாக இதனை மாற்றவும் பலர் அறிவுரை கூறியும் ஜெனிபர் சிறு வணிகமாகவே நடாத்திச் செல்லவே விரும்புகின்றார். இவ்வாறு அவர் விரும்புவதற்கான நான்கு காரணங்களைத் தருக.

(5x4=20 புள்ளிகள்)

03\. 1) "சிறப்பு சந்தை ஒன்றின் வாயிலில் பின்வரும் வாசகம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

"சமகால சூழ்நிலையில் இலத்திரனியல் பணக்கொடுக்கல் வாங்கல்களே பாதுகாப்பானது" என்பதாகும்.

அ) பொதுவாக இலத்திரனியல் பணக்கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) Covid – 19 தொற்று நிலைமையினைத் தொடர்ந்து இலத்திரனியல் பணப்பாவனை அதிகரித்திருப்பதனை காண முடிகின்றது. இதன்படி இவ் அட்டைகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கலினை மேற்கொள்வதற்கு காணப்படத்தக்க நான்கு வசதிகளைத் தருக.

2) இலங்கையில் தொழிற்பட்டு வரும் நிதி நிறுவன வகையினுள் வங்கித்துறை சார்ந்த உத்தரவு பெற்ற வணிக வங்கிகளும், உத்தரவு பெற்ற விஷேட வங்கிகளும் மிகப் பிரபல்யமானவை ஆகும்.

அ) உத்தரவு பெற்ற வணிக வங்கிக்கும், உத்தரவு பெற்ற விசேட வங்கிக்கும் இடையே நீர்காணும் இரு ஒற்றுமைகளினையும், இரு வேறுபாடுகளினையும் தருக.

ஆ) இன்று வணிக வங்கிகள் வைப்புக்களை ஏற்றல், கடன்வழங்கல் என்பனவற்றுக்கு மேலாக பல்வேறுபட்ட சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன. அவ்வாறு வழங்கப்படும் நான்கு சேவைகளினைக் குறிப்பிடுக.

3) அ) காசோலையின் அடியிதழ் மூலம் நடைமுறைக்கணக்கு உரிமையாளருக்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) "காசுக் காசோலை" (Cash cheque) என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குவதுடன் "காசுக் காசோலையில் குறுக்குக் கோடிட முடியாது" மேற்படி கூற்றினை விளக்கவும்.

4) "இடர்களைக் காப்புறுதி செய்யக்கூடிய இடர்கள், காப்புறுதி செய்ய முடியாத இடர்கள் என வகைப்படுத்த முடிவதுண்டு."

அ) காப்புறுதி செய்யக்கூடிய இடரிலிருந்து, காப்புறுதி செய்ய முடியாத இடர் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதற்கு நான்கு வேறுபாடுகளினைத் தருக.

ஆ) வணிகங்களின் வாழ்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் காப்புறுதி எவ்வாறு முக்கியத்துவ முடையதாக உள்ளது என்பதற்கு நான்கு காரணங்களை முன்வைக்குக.

5) "பயனுறுதியான தொடர்பாடலின்றி எந்தவித கருமத்தையும் இன்று வணிகர்கள் நிறைவேற்றிக் கொள்ள முடியாது"

அ) பயனுறுதியான தொடர்பாடலொன்றில் இருக்க வேண்டிய நான்கு பண்புகளினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

ஆ) வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்கு தொடர்பாடல் எவ்வாறு முக்கியத்துவமுடையது என்பதற்கு நான்கு காரணங்களை முன்வைக்குக.

(5x4=20 புள்ளிகள்)

04. 1) "விவசாயிகள் தமது காற்கறி, பழவகைகள் என்பவற்றை பண்ணைகளிலிருந்து விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்வதும், அவற்றை மொத்த, சில்லறை வியாபாரிகளினால் நாடு முழுவதும் விநியோகம் செய்தலும் இடம்பெறுவதுண்டு."

அ) மொத்த, சில்லறை வியாபாரிகளினால் விநியோகம் செய்வதற்காக பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றைத் தெரிவு செய்யும் போது, கருத்தில் கொள்ள வேண்டிய எவையேனும் நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

ஆ) விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் காய்கறி, பழவகைகளினை சேகரித்து வைத்து, விநியோகம் செய்வதற்கான களஞ்சியசாலை சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் யாவை?

2) "சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக வியாபாரத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளன.

அ) தற்போதைய தொற்று நிலைமைகளிலும் தமது வியாபாரத்தினை சிறப்பாக முன்நகர்த்திச் செல்வதற்கு சில்லறை வியாபாரிகள் பின்பற்றும் எவையேனும் நான்கு விற்பனை முறைகளினைக் குறிப்பிடுக.

ஆ) "எத்தகைய நெருக்கடியான சூழ்நிலைகளிலும் போக்குவரத்தும் வழங்கல் சேவையுமாகிய கருமங்களை வினைத்திறனாகவும், பயனுறுதி கொண்டதாகவும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுப்பதுண்டு." இதன்படி போக்குவரத்தும் வழங்கல் சேவையும் என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.

3) அ) போக்குவரத்து வழங்கல் சேவையின் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) "ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் அல்லது நாடுகளுடன் மேற்கொள்கின்ற வியாபாரம் வெளிநாட்டு வியாபாரம் என்பதாகும்" வெளிநாட்டு வியாபாரத்தின் நான்கு வகைகளினைக் குறிப்பிடுவதுடன், அவற்றில் எவையேனும் இரண்டினை விளக்குக.

4) அ) பந்தித்த (கட்டுண்ட) பண்டகசாலை என்றால் என்ன?

ஆ) பந்தித்த (கட்டுண்ட) பண்டகசாலை ஒன்றின் மூலம் இறக்குமதியாளனுக்குக் கிடைக்கும் பயன்கள் எவை?

5) சர்வதேச அமைப்புக்களும், வியாபார ஒப்பந்தங்களும் வெளிநாட்டு வியாபாரத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான தாக்கங்களினால் ஒரு நாட்டுக்கு ஏற்படும் சாதகமான, பாதகமான நிலைமைகள் தலா நான்கு வீதம் தருக.

(5x4=20 புள்ளிகள்)

## பகுதி II

05. 2019 ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் பரவிய Covid - 19 வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்தி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையினை வழமைக்கு கொண்டுவரும் நோக்கில் 2020 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "A – Z Virus Pro (Pvt) Ltd" என்ற வணிகமானது சுகாதார பாதுகாப்பு தொடர்பிலான கைகழுவும் திரவங்கள், சவர்க்காரங்கள், முகக்கவசங்கள், ஆடை கழுவும் கிருமிநீக்கிகள், நிலம் துடைக்கும் கிருமிநீக்கிகள், வைரஸ் தொற்றாளர்களை வீட்டில் பராமரிப்பதற்கான ஒரு நாள் பயன்படுத்தும் (One day use) உபகரணங்கள், பொலித்தீன் பாதுகாப்பு உடைகள், கையுறைகள், மற்றும் 24 மணிநேர தொலைபேசியூடான மருத்துவ ஆலோசனைகள் என பல்வேறுபட்ட பொருட்களையும் சேவைகளையும் நிகழ்நிலையூடாக கட்டளைகளைப் பெற்று வீடுவரை விநியோகிக்கின்றது. அதிகரித்த கேள்வி நிலைமைகளினை ஈடுசெய்வதற்கும், கிளைகளினை மாகாண ரீதியாக விஸ்தரிக்கவும், வணிகத்தை மறுசீரமைப்பது தொடர்பில் நிறுவன முகாமை தற்போது கரிசனை செலுத்துகின்றது.

1) "நிறுவனம் விரிவடையும் போது அதன் கருமங்கள் சிக்கலாக மாறுவதனால், அவ்வாறான நிலைமைகளுக்கு சிறப்பாக முகம்கொடுக்க நாம் தயாராக இருத்தல் வேண்டும்" என மேற்படி நிறுவன முகாமை கருதுகின்றது. நிறுவனம் விரிவடைகையில் அதன் கருமங்கள் ஏன் சிக்கலாக மாறுகின்றன என்பதற்கான நான்கு காரணங்களை முன்வைக்குக.

2) அ) மேற்படி "A – Z Virus Pro (Pvt) Ltd" னை திணைக்களப்படுத்தக்கூடிய நான்கு அடிப்படைகளை உதாரணங்களுடன் முன்வைக்குக.

ஆ) திணைக்களப்படுத்துவதனால் "A – Z Virus Pro (Pvt) Ltd" ற்கு கிடைக்கும் எவையேனும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

3) அ) "A – Z Virus Pro (Pvt) Ltd" ஆனது தோன்றும் பிரச்சினைகளுக்காக, பல்வேறு மாற்றுவழி முறைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி பின்னர் அவற்றிலிருந்து சிறந்த வழியொன்றைத் தெரிவு செய்கின்றது. இதன் போது இந்நிறுவனம் கையாளக்கூடிய நியதிகளாக நீர் எவற்றை எடுத்துக்கூறுவீர்?

ஆ) சந்தையில் மிகப்பிரபல்யமாகிவரும் "A – Z Virus Pro (Pvt) Ltd" ன் பொருட்கள், சேவைகள் தொடர்பிலும் அவற்றின் தரம், விலை, நாடு முழுவதற்குமான உடனடி விநியோக செயற்பாடுகளின் ஊடே நோய்த்தொற்றினை கட்டுப்படுத்தும், நிறுவன ஒழுங்கமைத்தல் செயற்பாட்டினை பல்வேறு தரப்பினரும் பாராட்டுகின்றனர். இதிலிருந்து இந்நிறுவனத்தின் ஒழுங்கமைத்தல் பலங்களாக நீர் எவற்றைக் கருதுகின்றீர்?

4) தற்போது ஐந்து பிராந்திய முகாமையாளர்களின் கீழ் மாகாணத்திற்கு ஒரு கிளை என்ற அடிப்படையில் நாடுமுழுவதும் தனது நிறுவனச் செயற்பாட்டினை விஸ்தரிக்கின்றதெனில், முகாமைத்துவ தேவை கருதி நிறுவனக்கட்டமைப்பு ஒன்றினை தயார் செய்வது தொடர்பில் முகாமை கவனம் செலுத்துகின்றது.

அ) "நிறுவனக்கட்டமைப்பு" என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) நிறுவனக்கட்டமைப்பு ஒன்றினூடாக வெளிப்படுத்தப்படும் எவையேனும் நான்கு கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

5) அ) "A – Z Virus Pro (Pvt) Ltd" ற்கு தேவையான பொருட்களினைக் கொள்வனவு செய்வதற்காக வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான எவையேனும் நான்கு நியதிகளை சுருக்கமாக விளக்குக.

ஆ) "A – Z Virus Pro (Pvt) Ltd" ஆனது தனது வணிகச் செயற்பாடுகள் தொடர்பில் தகவல்களினை சேகரித்து அவற்றை மேம்படுத்த ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவொன்றை நிறுவுகின்றது. இதன் மூலம் இந்நிறுவனத்திற்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)

06. 1) தளபாட உற்பத்தி தொழிற்சாலை ஒன்றினை வடமாகாணத்தில் உருவாக்கும் எண்ணத்துடன் திரு. P . துவாரகன் என்பவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற நகரங்களில் பொருத்தமான காணியொன்றினை நீண்டகால குத்தகைக்கு தேடுகின்றார். பல்வேறு விடயங்களை ஆய்வு செய்த துவாரகன் நிறைவில் கிளிநொச்சியில் காணியொன்றினைப் பெறுகின்றார்.

அ) பல்வேறு இடங்களில் தொழிற்சாலைக்கான இடத்தினைத் தேடி, நிறைவில் பொருத்தமான ஓர் இடத்தினை தேர்வு செய்தமையில் எக்காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருத்தல் கூடும் என நீர் கருதுகின்றீர்?

ஆ) கிடைக்கப்பெற்ற காணித்துண்டில் தொழிற்சாலைத்தள அமைப்பினை திட்டமிட்டு உருவாக்குவதன் முக்கியத்துவங்கள் எவை என்பதற்கு நான்கு காரணங்களை முன்வைக்குக.

2) "பொருள் ஒன்றின் வாழ்க்கைச்சுற்றோட்டத்தின் போது விற்பனையாளரினால் பல்வேறு உபாய வழிமுறைகள் பின்பற்றப்படுவதுண்டு"

அ) உற்பத்திப் பொருள் வாழ்க்கைச் சுற்றோட்டம் என்பதனை விளக்கி, அதன் பிரதான கட்டங்களினையும் குறிப்பிடுக.

ஆ) சந்தையில் புதிய பண்புகளுடன் கூடிய புதிய பொருளினது அறிமுகத்தினைத் தொடர்ந்து, குறித்த பொருளொன்று முதிர்ச்சிக்கட்டத்தினை எட்டியுள்ளது. இதன் போது குறித்த உற்பத்தியாளர் உடனடியாக எடுக்கக்கூடிய நான்கு தந்திரோபாயங்களினைத் தருக.

3) மாத்தளை நகரில் வணிகம் ஒன்றினை நடாத்தி வரும் திரு.ஜிரோஷன் என்பவர் பொருள் இருப்பு தொடர்பான மாதாந்த தகவல்களாக பின்வருவனவற்றை முன்வைத்துள்ளார்.

இழிவு இருப்பு பயன்பாடு நாளொன்றிற்கு 80 அலகுகள்

உச்ச இருப்பு பயன்பாடு – நாளொன்றிற்கு 120 அலகுகள்

மறுகட்டளைக்காலம் - இழிவு நாட்கள் 20

மறுகட்டளைத் தொகை – 5 000 அலகுகள்

மேற்காட்டிய தகவல்களினூடாக பின்வருவனவற்றைக் கணிக்குக.

அ) மறுகட்டளை மட்டம்

ஆ) இழிவு இருப்பு மட்டம்

இ) உச்ச இருப்பு மட்டம்

ஈ) சராசரி இருப்பு மட்டம்

4) தற்போது Covid – 19 தொற்று நிலைமை காரணமாக அடிக்கடி நடைமுறைப்படுத்தப்படும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக, வீட்டிலிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த வங்கிச்சேவையினை வழங்குவதற்காக வங்கியாளர்களினால் சந்தைப்படுத்தல் கலவையினை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

5) "மூலதனச்சந்தையுடன் ஒப்பிடுமிடத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடனும், வணிகங்களின் வாழ்தன்மையுடனும் பணச்சந்தையே முக்கியத்துவமானதென கருதப்படுவதுண்டு" மேற்படி கூற்றினை நியாயப்படுத்துவதற்கான எவையேனும் நான்கு காரணங்களை முன்வைக்குக.

(5x4=20 புள்ளிகள்)

07. 1) வரையறுக்கப்பட்ட பிரகாஸ் பொதுக்கம்பனியானது, 2005 ஆம் ஆண்டு 500,000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூபா 12 படி வழங்கியுள்ளது. கடந்தாண்டு 2020 இல் ஒரு பங்கிற்கு ரூபா 2 னை பங்கிலாபமாக பிரகடனப்படுத்தியிருந்தது. அதே நேரம் கம்பனியின் நிறுத்தி வைத்த இலாபம் ரூபா 500,000 ஆகக் காணப்பட்டதுடன், 8% மான ரூபா 600,000 தொகுதிக்கடன்களினையும் குறித்த கம்பனி கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் குறித்த கம்பனியின் சாதாரண பங்கொன்று ரூபா 28 ஆக சந்தையில் பரிமாற்றப்படுகின்றது.

அ) குறித்த கம்பனியினால் 2020 ஆம் ஆண்டிற்கு பிரகடனப்படுத்தியுள்ள மொத்தப்பங்கிலாபம் எவ்வளவு?.

ஆ) குறித்த கம்பனியின் 31.12.2020 இல் காணப்படும் மொத்த உரிமை மூலதனம் எவ்வளவு?

இ) குறித்த கம்பனியின் தற்போதைய சந்தை மூலதனவாக்கம் எவ்வளவு?

ஈ) குறித்த கம்பனியின் 3500 சாதாரண பங்குகளை கொள்வனவுசெய்து வைத்துள்ள திரு.ஜெஸ்லி என்பவர், 2020 ஆம் ஆண்டிற்கான பங்கிலாபங்களைப் பெற்ற பின்னர், பங்குகள் முழுவதனையும் சந்தையில் விற்பாராயின் அவருக்கு கிடைக்கும் மொத்த மூலதன இலாபம் எவ்வளவு?

2) "புதிய உற்பத்திப் பொருளொன்றை சந்தைக்கு வழங்கத் தீர்மானித்துள்ள உற்பத்தியாளர் அதன் பண்டக்குறி தொடர்பில் அதிக கரிசனை செலுத்துகின்றார்."

அ) சிறந்த பண்டக்குறியொன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகள் எவை என அவ் உற்பத்தியாளருக்கு விளக்குக.

ஆ) உற்பத்தியாளருக்கு பண்டக்குறியினால் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

3) "சந்தைப்படுத்தல் மைய எண்ணக்கருக்களில் ஒன்றே செலுத்தப்பட்டதும், உரிமையாக்கப்பட்டதுமான ஊடகம் என்பதாகும்"

அ) மேற்படி செலுத்தப்பட்டதும், உரிமையாக்கப்பட்டதுமான ஊடகம் என்பனவற்றினை தனித்தனியே விளக்குக.

ஆ) பொருள் அல்லது சேவைக்கு பொருத்தமான செலுத்தப்பட்ட ஊடகமொன்றினைத் தெரிவு செய்யும் போது வணிகர் ஒருவர் கருத்தில் கொள்ளும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

4. "பயணிகள் தனியார் பேரூந்து சேவையினை நடாத்தும் Kevin Travels & Tours (Pvt) Ltd நிறுவனமொன்றில் தற்போது 60 சாரதிகள் காணப்படுவதுடன், அதே எண்ணிக்கையிலான பேருந்துகளும் காணப்படுகின்றன. எதிர்வரும் ஆண்டில் பேரூந்துகளின் எண்ணிக்கையினை மேலும் 20% மாக அதிகரிக்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அதே நேரம் 9 சாரதிகள் தமது இராஜினாமாக்கடிதங்களை சமர்ப்பித்திருப்பதுடன், 4 சாரதிகள் அடுத்தாண்டில் இளைப்பாறவும் உள்ளனர். 5 சாரதிகள் மேற்பார்வையாளர்களாக பதவி உயர்த்தப்படவும் உள்ளனர். நிறுவன ஆட்சேர்ப்பு கொள்கையின்படி 30% மான ஊழியர் வெளியிலிருந்தே மேற்கொள்ளப்படுவதுண்டு."

அ) இந்நிறுவனத்தில் உள்ளிருந்து ஆட்சேர்க்கப்படும் சாரதிகள் எத்தனை?

ஆ) இந்நிறுவனத்தில் 70% மான சாரதிகள் உள்ளிருந்தே ஆட்சேர்க்கப்படுவதனால், நிறுவனத்திற்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

5) மனிதவள முகாமைத்துவத்தில் பின்வரும் பயிற்சியளித்தல் முறைகளினை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.

அ) உருவகப்படுத்தல் நடிப்பு (Simulation training)

ஆ) உணர்திறன் பயிற்சி (Sensitivity training)

(5x4=20 புள்ளிகள்)

08. 1) ஆர்த்தி நிறுவன உற்பத்தியின் விற்பனைகள் 2020 இல் மோசமாக சரிவுற்றது. அதன் வரலாற்றில் முதன் முறையாக அது நட்டத்தில் இயங்கியது. நிறுவன வருமானம் 6 000 அலகுகளினை விற்றதன் ஊடாக பின்வரும் முடிவுகளை வருமானக்கூற்றில் வெளிப்படுத்தியது.

| | |
|---|---|
| தேறிய விற்பனை | 240,000 ரூபா |
| மொத்தச் செலவும் கிரயங்களும் | 25,400 ரூபா |
| தேறிய நட்டம் | 14,000 ரூபா |

மொத்தச் செலவும், மொத்தக்கிரயங்களும் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | மொத்தச் செலவு (TC) | மாறும் கிரயம் (VC) | நிலையான கிரயம் (FC) |
|---|---|---|---|
| விற்பனைக்கிரயம் | 210,000 | 144,000 | 66,000 |
| விற்பனைச் செலவு | 24,000 | 7,200 | 16,800 |
| நிர்வாகச் செலவு | 20,000 | 4,800 | 15,200 |
| | 254,000 | 156,000 | 98,000 |

அடுத்துவரும் ஆண்டில் பின்வரும் இரு மாற்று வழிகளை நட்டத்திலிருந்து மீள்வதற்காக முன்வைக்கின்றது.

A : விற்பனை விலையினை 20% னால் அதிகரித்தல் எனினும் இதனால் விற்பனை அலகுகள் மற்றும் செலவுகளிலும் கிரயங்களிலும் மாற்றம் ஏதும் இல்லாதிருத்தல்.

B : விற்பனை நபர்களுக்கான ஆண்டுச்சம்பளமாகிய 15,000 ரூபாவில் 6,000 ரூபாவினை நிலையாகவும், மீதி தேறிய விற்பனையில் 3% தரகாகவும் வழங்குதல்.

அ) மேற்குறித்த A, B ஆகிய இரு தெரிவுகளுக்குமான சமப்பாட்டுப் புள்ளிக்கான அலகுகளை தனித்தனியே துணிக.

ஆ) மேற்குறித்த A, B ஆகிய இரு தெரிவுகளில் ஒன்றினைத் தெரிவு செய்வதற்காக தனித்தனியே அவற்றின் மொத்த விற்பனை வருமானம், மொத்தச் செலவுகள் என்பவற்றினைக் கொண்டு இலாபத்தினை துணிவதுடன், அதன் அடிப்படையில் பொருத்தமான தெரிவு ஒன்றினை முன்வைக்குக.

2) "பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய ஊழியர் ஒருவரை பதவியில் நிரந்தரமாக்க முன்னர் சேவை செய்ய வேண்டிய காலப்பகுதி தகுதிகாண் காலம் என்பதாகும்."

அ) நிறுவனங்களினால் இத்தகைய தகுதிகாண்காலம் (Probation Period) வழங்கப்படுவதன் நான்கு குறிக்கோள்களினைக் குறிப்பிடுக.

ஆ) நிறுவனமொன்றில் தகுதிகாண் ஊழியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர் ஒருவர் தொடர்பில் முகாமை திருப்தியடைய முடியாதுவிடில், எடுக்கப்படக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

3) தனியார் துறை நிறுவனமொன்றில் நடுத்தரமட்ட முகாமையாளராகப் பணியாற்றிய திரு.முகமட்றில்லா என்பவர் உடனடியாக செயற்படும் வகையில் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் ஒன்றினைப்பெற்று பொதுமுகாமையாளராக பிறிதொரு வேலைத்தளத்திற்கு மாற்றப்படுகின்றார். பதவியினை பொறுப்பேற்ற அவர் குறித்த பிரிவில் இதுவரை தகவல்களைப் பேணுவதற்கு ஒழுங்கான முறைமை ஒன்று இல்லாதிருப்பதுடன், கடந்தகால தகவல் ஒன்றினைப் பெற அதிக நேரங்களைச் செலவிட வேண்டி இருப்பதனையும் கண்டறிந்தார்.

அ) திரு.முகமட்றில்லா தகவல்களை மீளவகைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய எவையேனும் நான்கு தகவல் வகைப்படுத்தும் நியதிகளையும் அவை ஒவ்வொன்றினுள்ளும் அடங்கும் பிரிவுகளினையும் எடுத்துக்காட்டுக.

ஆ) சிறந்த தகவல் முறைமையொன்றை உருவாக்குவதன் ஊடாக திரு.முகமட்றில்லாவுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

4) பின்வரும் வணிகதகவல் முறைமை தொடர்பான அட்டவணையில் வணிகமொன்றின் முக்கிய சில தகவல்களும், அவற்றை வகைப்படுத்துவதற்கான பிரதான மூன்று நியதிகளும் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான வகைப்படுத்தல் கூறுகளை இட்டு அட்டவணையினைப் பூரணப்படுத்துக. (உமது விடைத்தாளில் இலக்கங்களைக் குறிப்பிட்டு விடையினை எழுதுக)

| வணிகத்தகவல்கள் | | பயன்பாட்டு மட்டத்திற்கு அமைய | பயன்பாட்டிற்கு அமைய | முகாமைத்துவ தொழிற்பாட்டிற்கு அமைய |
|---|---|---|---|---|
| அ) | புதிய உற்பத்தி அறிமுகம் | 1) ………………… | கொடுக்கல்வாங்கல் செயன்முறைப் படுத்தல் முறைமை | 2) ………………….. |
| ஆ) | நீண்டகால நிதியீட்டம் | தந்திரோபாய மட்டம் | 3) ……………….. | நிதிமுகாமைத்துவம் |
| இ) | நவீன வடிவமைப்பு ஆராய்ச்சி | 4) ………………… | அறிவுப்பணி முறைமை | ஆராய்ச்சி அபிவிருத்தி |
| ஈ) | சமப்பாட்டுப்புள்ளி | முகாமைத்துவ மட்டம் | 5) ……………….. | 6) ………………….. |
| உ) | அடுத்தாண்டு ஓய்வு பெறும் ஊழியர் | அறிவு மட்டம் | 7) ……………….. | 8) ………………….. |

5) "வணிகத்திட்டமொன்று இல்லாமல் வணிகமொன்றை ஆரம்பிப்பதும், கொண்டு நடாத்துவதும் விவேகமான கருமமொன்றல்ல" மேற்படி கூற்றினை வலியுறுத்தக்கூடிய எவையேனும் நான்கு வணிகத்திட்டத்தின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)